முருகப்பெருமான் துணை

**மகான் இயற்பகை நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.06.2022, புதன்கிழமை

1. அண்ணலே ஆறுமுகப் பெருமானின்
அவதார ஞான வள்ளலே
மண்ணுலகை மீட்பேன் என
மாதவபலமோடு வந்த ஞானியே
2. ஞானியே உன்பெருமை கூறி
ஞாலமதில் சுபகிருது மிதுன திங்கள்
இனிமைபட மூவை திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 15 நாள், 29.06.2022 புதன்கிழமை)
இயம்புவேன் அருளாசி தன்னை
3. தன்னையே இயற்பகை நாயனாரும்
தரணியே வளமுற உரைப்பேன்
எண்ணம் தூய்மை அடைய
ஏழாம்படை வீட்டுக்கு மக்கள் வரவேண்டும்
4. வேண்டி வந்து ஞானியரான
வேலவன் திருவடிப் பற்றி
தொண்டர்கள் ஆகும் வண்ணம்
தொண்டுகள் செய்து பழக
5. பழகவேணும் நாம செபத்தை
பிழையின்றி முருகா அரங்கா என
வழக்கமாக்கி நித்தம் தொடர
வணங்கி சரவணச் சுடரேற்ற
6. ஏற்றவே மனத்தூய்மை கூடி
எல்லாம் இறைச்செயலே எனும்
ஆற்றலும் பக்குவமும் மிகுந்து
அகத்தூய்மை புறத்தூய்மைபடவே
7. ஆகவே ஞானவான்களாவர்
அரங்கமகான் தயவை பெற்றிட
வகையான தரும சிந்தை பெருகி
வல்லமைபட அன்னதான சேவை
8. சேவையும் துவக்கித் தொடர்ந்து
செப்பிட வேலவன் ஆசிபட
அவனியில் செய்து நன்கு
அறிவிப்பேன் தருமவான்கள் ஆவர்
9. ஆவரே அனுதின பூசை பலனால்
ஆறுமுகன் அருட் தயவால்
அவனியை மாற்ற வல்ல
அரங்கன் தேடல்வழி ஞானியாகி

10. ஆகியே உலகை மாற்றவும்
அனைத்து வளம் படைத்து
அகிலத்தில் ஞான ஆட்சிதனை
அமைத்திடும் சக்தியுள்ளவர்கள் ஆகி

11. ஆகியே உலகமாற்றம் செய்ய
அவதரித்த அரங்கன் நோக்கம்
அகிலம் அடைந்திடதுணை வருவர்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–